

தூய்மை பணியின்போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியை காவல் நிலையத்தில் ஒப்படைத்த துப்புரவு பணியாளர் திருமதி கிளாராவுக்கு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.9.2025) புத்தாடை மற்றும் வெகுமதி வழங்கி பாராட்டு தெரிவித்தார். துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா கணவர் ராமச்சந்திரன், குழந்தைகள் செல்வி ரா.சூசைமேரி, செல்வி ரா.சுவாதி, செல்வி ரா.நிக்கிதாஸ்ரீ ஆகியோர் உடன் உள்ளனர்.



தூய்மை பணியின்போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியை காவல் நிலையத்தில் ஒப்படைத்த துப்புரவு பணியாளர் திருமதி கிளாராவுக்கு, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.9.2025) புத்தாடை மற்றும் வெகுமதி வழங்கி பாராட்டு தெரிவித்தார். துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா கணவர் ராமச்சந்திரன், குழந்தைகள் செல்வி ரா.சூசைமேரி, செல்வி ரா.சுவாதி, செல்வி ரா.நிக்கிதாஸ்ரீ ஆகியோர் உடன் உள்ளனர்.

### தமிழ்நாட்டுக்கு உறுதுணையாக நின்று – தென்னகத்தின் தனிச்சிறப்பைப் பறைசாற்றும்

# மலையாளச் சகோதர - சகோதரிகளுக்கு ஓணம் திருநாள் வாழ்த்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**செய்தியில், "தமிழ்நாட்டுக்கு உறுதுணையாக நின்று, தென்னகத்தின் தனிச்சிறப்பைப் பறைசாற்றும் மலையாளச் சகோதர சகோதரிகளுக்கு ஓணம் திருநாள் வாழ்த்துகள்" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஓணத் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

அறுவடைத் திருநாளாம் ஓணத்தினை எழுச்சியோடும் ஏற்றத்தோடும் கொண்டாடும் என் மனதிற்கினிய மலையாள உணவு, கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகளுடன் சமத்துவத்தையும் ஒற்றுமையையும் கேரள மக்களின் சகோதர உணர்வையும் வெளிப்படுத்தும் கொண்டாட்டமாக அமைந்துள்ள திருநாள்தான் ஓணம். "மாயோன் மேய ஓண நன்னாள்" எனச் சங்கத் தமிழிலக்கியத்திலும் பதிவாகியுள்ள, திராவிட இனத்தின் திருவிழாவாகத் திருவோணம் விளங்குகிறது,

ஓணத்தின் மீது சமத்துவத்துக்கு எதிரான குழுவினர் புனைந்த கதைகளில் இருந்தும், நம் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்து, நல்லாட்சி புரிந்த மாவலி மன்னனை நினைவுகூரும் கொண்டாட்டமாக மலையாளிகள் ஓணத்தைப் போற்றி வருகின்றனர்.

திராவிட உணர்வெழுச்சியுடன் தமிழ்நாட்டுக்கு உறுதுணையாக நின்று, தென்னகத்தின் தனிச்சிறப்பைப் பறைசாற்றும் மலையாளச் சகோதர - சகோதரிகள் அனைவருக்கும் இந்த ஓணம் பொன்னோணமாகத் திகழ எனது வாழ்த்துகள்!

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கப்பலோட்டிய தமிழன்

# வ.உ.சிதம்பரனார் 154 வது பிறந்த நாள்!

### திருவுருவச் சிலைக்கு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்!

சென்னை, செப். 5 -

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 154வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள், இன்று (5.9.2025) காலை 10 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

செக்கிழுத்த தியாகச் செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் உலகநாதன் பிள்ளை பரமாயி அம்மையார் தம்பதியருக்கு 5.9.1872 அன்று மகனாகப் பிறந்தார்.

அடிப்படைக் கல்வியை ஒட்டப்பிடாரத்திலும், உயர்நிலைக் கல்விப் படிப்பைத் தூத்துக்குடியிலும், சட்டக் கல்வியைத் திருச்சியிலும் பயின்று வழக்குரைஞர் ஆனார். சமூக சேவையிலும் அரசியல் பணியிலும் படிப்படியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

தாய்நாட்டின் விடுதலைக்காகத் தமிழ்நாட்டிலிருந்து பங்கேற்ற தலைவர்களில் முதன்மையானவர் வ.உ.சிதம்பரனார்.

அரசியல் வாழ்க்கையில் பாலகங்காதர திலகரைத் தமது குருவாக ஏற்றுக் கொண்டு ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை அடியோடு ஒழித்திட அரசியல் ரீதியாகவும், வணிக ரீதியாகவும் "சுதேசி நாவாய்ச் சங்கம்" என்ற கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இதனாலேயே "கப்பலோட்டிய தமிழன்" எனப் பெயர் பெற்றார்.

வ.உ.சிதம்பரனாரின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகளால் கோபமடைந்த ஆங்கிலேயர்கள், அரசாங்கத்தை அவமதித்ததாகவும், சுதந்திரத்திற்காகப் பொதுமக்களைத் தூண்டியதாகவும் இவர் மீது வழக்குப் பதிவு செய்து, இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இதன் காரணமாக 1908ஆம் ஆண்டு கோவை சிறையில் அடைக்கப்பட்டுச் செக்கிழுக்க வைக்கப்பட்டார்.

தமிழ்நாட்டு மக்களால் பெரிதும் போற்றப்படும் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பல்வேறு இன்னல்களுக்கு இடையிலும், தாய்மொழி தமிழ்மொழி மீது கொண்டிருந்த தணியாத பற்றின் காரணமாகப் பல அரிய நூல்களையும், சுயசரிதையையும் கவிதை வடிவில் எழுதியுள்ளார். தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், 1975 முதல் 1976 வரை தூத்துக்குடியில் கட்டிமுடிக்கப்பட்ட 4 கப்பல் தளங்களுக்குச் செக்கிழுத்த செம்மல் வ.உ.சி அவர்களின் பெயர் சூட்டப்பட்டது. 1998ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் எழுதிய 16 நூல்களும் அரசுடைமையாக்கப்பட்டன.

நம் தேசத்தின் விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்தும் அயராது பாடுபட்டும், தாய் நாட்டிற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்து, மறைந்தும் மக்களின் மனங்களில் என்றும், நிறைந்துள்ள கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாரின் பிறந்த நாள் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, இந்த ஆண்டின் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 154வது பிறந்த நாள் நிகழ்ச்சியில் மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற உறுப்பினர், துணை மேயர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

### புதுடெல்லியில் நடைபெற்ற

# சரக்குகள் - சேவைகள் வரி மன்றத்தின் 56வது கூட்டத்தில் தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டார்!

### தமிழ்நாடு அரசின் கருத்துகளை எடுத்துரைத்தார்!



புதுடெல்லி, செப். 5 -

புதுடெல்லியில் 3.9.2025 அன்று நடைபெற்ற சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் 56ஆவது கூட்டத்தில் நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு தமிழ்நாடு அரசின் கருத்துக்களை எடுத்துரைத்தார்.

தனிநபர் ஆயுள் காப்பீடு மற்றும் தனிநபர் மருத்துவக் காப்பீட்டு சேவைகளுக்கு வரிவிலக்கு உள்ளிட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சீரமைப்பு நடவடிக்கைகளை அமைச்சர் வரவேற்றார்.

அதே நேரத்தில், மாநில வருவாய் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். அரசியலமைப்பு திருத்தம் மூலம் தற்போதைய மேல்வரியை தொடரலாம் அல்லது சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத் திருத்தம் மூலம் உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பொருட்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்களுக்கு மட்டும் உச்ச வரிவரம்பினை அதிகரிக்கலாம் என்று அமைச்சர் பரிந்துரைத்தார்.

ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரித்தீர்வு நடைமுறைகளை நெறிப்படுத்துவதற்கு, அலுவலர்கள் குழுவின் அறிக்கையை முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார். இக்குழுவின் பரிந்துரைகளை இவ்வருட டிசம்பர் மாத இறுதிக்குள் செயல்படுத்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஏற்றுமதி மற்றும் தலைகீழ் வரி அமைப்பின் (Inverted Duty Structure) கீழ் தற்காலிகமாக சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை திரும்பப் பெறுவதற்கான (Provisional Refund) தானியங்கி வழிமுறையினை அமைச்சர் வரவேற்றார். வணிகம் செய்வதை எளிமைப்படுத்துவதற்கான, சிறு இடர் அளவுரு கொண்ட வணிகங்களுக்கு எளிதாக்கப்பட்ட பதிவு முறையினை அமைச்சர் வரவேற்றார்.

உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பொருட்களுக்கு இழப்பீட்டு மேல்வரி விதிக்கும் காலத்தை அக்டோபர் முதல் 2 அல்லது 3 மாதங்களுக்கு நீட்டிக்க சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமன்றம் பரிந்துரைத்துள்ளதால், தமிழ்நாடு அரசின் பரிந்துரைகளை சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமன்றம் பரிசீலிக்கும் என்று அமைச்சர் அவர்கள் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

இக்கூட்டத்தில் நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மை செயலாளர் பிரஜேந்திர நவ்னிட், வணிகவரி ஆணையர் எஸ். நாகராஜன் மற்றும் வணிகவரித் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட துறைமுகம், வில்லிவாக்கம் மற்றும் எழும்பூர் தொகுதி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம்!

மாவட்டம்–மாநகரம்–ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர் ஆகிய கழக அமைப்புகளில் இளைஞர் அணிக்கு ஏற்கெனவே நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், கழகத்தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தலைமைக்கழக ஒப்புதலுடன் தற்போது ஒன்றியத்துக்குட்பட்ட கிளைகளிலும் நகர–பகுதி–பேரூர் வட்டங்களிலும் மற்றும் அனைத்து பாகங்களிலும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில், சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட துறைமுகம், வில்லிவாக்கம் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதிகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பகுதி, வட்ட, பாக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 05.09.2025 வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில், அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது. துறைமுகம், வில்லிவாக்கம் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை-18.
நாள் : 04-09-2025

கலைஞர் 100 1924 - 2023




### அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை! குன்றத்தூர் வடக்கு ஒன்றிய

# மாவட்டப் பிரதிநிதி எஸ்.சந்தானம்-கலாவதி இல்லத் திருமணம்!

### டி.ஆர்.பாலு எம்.பி.– ஆர்.எஸ்.பாரதி கழகத்தினர் வாழ்த்துரை!



சென்னை, செப். 5–

குன்றத்தூர் வடக்கு ஒன்றிய மாவட்டப் பிரதிநிதி எஸ்.சந்தானம் – பரணிபுத்தூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கலாவதி சந்தானம் ஆகியோரின் புதல்வர் எஸ். ஜெயகுமார் (எ) பிரேம் குமாருக்கும், மாங்காடு கே.பாபு – செல்வி ஆகியோரின் புதல்வி பி.ஷாலினிக்கும் திருமணம் 11.09.2025 வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் குன்றத்தூர் மெயின் ரோடு, கோவூரில் உள்ள தனலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமை வகிக்கிறார்.

இம்மணவிழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., ஆர்.எஸ்.பாரதி, மீ.அ.வைதியலிங்கம், ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., படப்பை ஆ.மனோகரன், ஏ.வந்தேமாதரம், சரஸ்வதி மனோகரன், உமா மகேஸ்வரி வந்தேமாதரம், இ.மணி, கோ.சத்தியமூர்த்தி, எஸ்.ஜபருல்லா, கே.எத்திராஜ், எம்.ஆர். சீனிவாசன், திரைப் பட நடிகர் ரமேஷ் கண்ணா ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இதில் து. சுந்தர், பொன். ஜீவா, கே. வசீகரன், பூங்கொடி அரசு, எஸ். ராஜா தேசிங்கு, பா.ராஜேந்திரன், எஸ். கே.துளசிங்கம், த.க.பாஸ்கரன், டி.எஸ். எம்.ஜெயகரன், டி.ஆர். சாரதி பெரியநாயகம், ப.குமரவேல், தா.அன்பழகன், தமிழரசி சுரேஷ், சுலைமான் சையத், சு.ஜனார்த்தனன், ரா. நவீன்ராஜ், வெ.கவிபாரதி, கு.பிரவீன்குமார், கு.தமிழ்வாணன், செ. இமான் (எ) கௌதம், செ. அரிபிரகாஷ், ப.சிலம்பரசன், ர.பிரபு, வெ.வசந்தகுமார், ரா.அரிபாபு, து.நாராயணன், மகேஸ்வரி, பா. காமாட்சி, ஜோஸ்பின் கிளாரா, தி.சுகுணா, ஜெ.ஜெயஸ்ரீ, எம்.ஆனந்தி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இம்மணவிழாவிற்கு வருகை தருவோரை கௌரி தா. மோதரன், சி. பாண்டியன் ஆகியோர் வரவேற்கின்றனர்.



சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் அனைத்து ஆசிரியர்களுக்கும் TET தகுதித் தேர்வு கட்டாயம் என்ற மாண்பமை உச்ச நீதிமன்ற தீர்ப்பின் மீது மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்து கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதன்மைச் செயலாளர் சந்தர மோகன், இயக்குநர் முனைவர்.ச.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர். பெ.குப்புசாமி, தொடக்கக்கல்வி இயக்குநர் முனைவர்.பூ.ஆ.நரேஷ் மற்றும் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று சூளை, அங்காளபரமேஸ்வரி மற்றும் காசி விசுவநாதர் சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஜ. முல்லை. கே. எஸ். ரவிச்சந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி நியமனக்குழு உறுப்பினர் சொ. வேலு, உதவி ஆணையர் . க. சிவகுமார். திருக்கோயில் செயல் அலுவலர் பி. சண்முகம். உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.